# பயன்படுத்துனர் கையேடு

**வியாபாரத்தை கட்டி எழுப்புகின்ற சூழலை தாக்குப்பிடிக்கின்ற கருவிகள் (BBCR)**

Nordic Climate Facility
Initiative by NDF

# 1. BBCRகருவிகள் என்றால் என்ன ?

இலங்கையில் உள்ள **சிறிய மற்றும் மத்திய வியாபார உரிமையாளர்கள்** வெள்ளப்பெருக்கினால் ஏற்படுகின்ற எதிர்மறையான தாக்கங்களை குறைத்து தமது தொழில் முயற்சிகளின் ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக, எளிமையாக அதேவேளை இலகுவில் அனுகிப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் மற்றும் விதப்புரைகள் ஆகியவற்றை வழங்கக்கூடியதாக வியாபாரத்தை கட்டி எழுப்புகின்ற சூழலை தாக்குப்பிடிக்கின்ற கருவிகள் (BBCR) இலக்காகக் கொண்டுள்ளன.

இந்த APP ஐ பயன்படுத்துபவர்கள் பின்வரும் அம்சங்களை பிரதான நன்மைகளாக உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும் அவையாவன:

- **நேரடி மழைவீழ்ச்சி மட்டத்தை கண்டறிகின்ற மழைவீழ்ச்சி தொடர்பான வரைபடம்**: தமது வியாபாரத் தளத்தை சூழ உள்ள இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதை கண்டறிவதற்கான மழைசார்ந்த தரவுகள் பற்றிய விபரங்களை அறிவதற்கு பயன்பாட்டாளர் பங்களிப்பு செய்கின்றார். வியாபார உரிமையாளர்களுக்கு இது ஓர் முன்னெச்சரிக்கை முறையாக உதவுவதுடன் தமது வியாபாரங்களை பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றது.
- **முன்கூட்டிய விதப்புரைகள்**: தமது வியாபாரம் தொடர்பான தகவல்களை ரகசியமாக பாதுகாப்பான முறையில் பரிமாறிக்கொள்வதன் மூலம் இடர்களை குறைத்து தொழில்நிறுவனங்கள் வெள்ளப்பெருக்கு தொடர்பான தயார் நிலைகளை மேம்படுத்துவதற்கான விதப்புரைகளை பயன்படுத்துனர் உருவாக்க முடியும். இந்த BBCR கருவிகள் தொடர்பான இந்த பிரதி ஆனது ஒரு பரிசோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்டது என்பதை பயன்படுத்துனர்கள் தயவுசெய்து கருத்திற் கொள்ளவும்.



இந்த பரீட்சார்த்த காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னூட்டங்களின் அடிப்படையில் இந்த APP ஆனது சீரமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்படும் - இந்த கருவியை பயன்படுத்துவது தொடர்பிலான உங்களது அபிப்பிராயங்களையும் அனுபவங்களையும் கேட்டறிவதற்கும் நாம் ஆவலாக இருக்கின்றோம்.

## 2. இந்த கருவியானது எவ்வகையில் உங்கள் வியாபாரத்திற்கு உதவும்?

இந்த **app** ஐ பயனர்கள் பயன்படுத்துகின்ற பொழுது பின்பற்ற வேண்டிய அம்சங்கள் பற்றி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.



சிறிய மற்றும் மத்திய வியாபார உரிமையாளர்களுக்கான இந்த புதிய APP பற்றி இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இருந்து (CCC) சுனில் அறிந்துகொள்கிறார். மேலும் இக்கருவி பற்றிய மேலதிக விபரங்களை அறிவதற்கும் ஆவலாக இருக்கின்றார். இந்த APP ஐ பதிவிறக்கம் செய்ததன் பின்னர் ஏனைய வியாபார நிலையங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் ஆகியன மழை தொடர்பான தரவுகளை வழங்குவதை சுனில் அறிந்துகொண்டார்.






கம்பஹாவில் உள்ள சுனில் தனது வியாபாரம் எதிர்கொள்ளக்கூடிய வெள்ளப்பெருக்கு இடர்கள் பற்றிய மேலோட்டமான பார்வை ஒன்றினை பெற்றுக்கொள்ள இந்த˙ APP உதவுகின்றது.




ஒரு அனலாங் (Analog) மழைமானியை பெற்றுக்கொண்டு தரவுகளை இந்த APP இல் பதிவு செய்வதன் மூலம் மழை தொடர்பான தரவுகளுக்கு தனது பங்களிப்பினை வழங்க முடியும் என சுனில் தீர்மானிக்கிறார்.



இந்த APP பின் இரண்டாம் பகுதியில் தமது வியாபாரம் பற்றிய வாடிக்கையாளர்களது அறிவுரைகளை சுனில் பெற்றுக் கொள்கின்றார். விதப்புரைகளை பெற்றுக் கொள்ள (Get Recommendations) என்ற பொத்தானை சுனில் அழுத்துகிறார்.


தமது கட்டிடம் வெள்ளப்பெருக்கு, தொடர்பான கடந்தகால அனுபவம், உபகரணம் பற்றிய முக்கிய சில பிரதான தகவல்கள், கையிருப்பு, ஊழியர்கள் போன்றன பற்றிய குறுகிய மதிப்பீட்டு தகவல்களை சுனில் நிரப்புகிறார்

சுனில் எதிர்கொள்ளக்கூடிய இடர்களை இந்த APP மதிப்பீடு செய்வதுடன் பிரதான முன்னுரிமை செயற்பாடுகளை விதப்புரை செய்கின்றது. மேலதிகமாக கற்றுக் கொள்ளல் மற்றும் கடன் வழங்கும் அதிகாரியுடன் தொடர்பினை ஏற்படுத்துதல் ஆகியன தொடர்பான இணைப்பை சுனில் அழுத்துகின்றார்.இவற்றோடு தொடர்பான சிறந்த வியாபார திட்டங்களை அவர்கள் மேற்கொள்கின்றனர்.


முன்னுரிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இந்த APP ஆனது ஏனைய விதப்புரைகளையும் கொண்டுள்ளது. சுனில் இவற்றை கருத்திற் கொள்கின்றார்



சில மாதங்களுக்கு பின்னர் அவ்விடத்தில் கடும் மழை பெய்கின்றது. அறிக்கையிடப்பட்ட மழைவீழ்ச்சி மட்ட தகவல்களை வழங்கிய APP இன் பிரகாரம் அதிக மழை பெய்யலாம் என அறியப்பட்டது.




கடும் மழை தொடர்ச்சியாக பெய்யலாம் என்று அறிவுறுத்தலை APP மூலமாக சுனில் அறிந்து கொள்கின்றார். கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் வியாபார தளத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதை அறிந்து கொள்கின்றார்.



இந்த APPபினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை கருத்திற்கொண்டு வெள்ளப்பெருக்கு தொடர்பான உரிய தயார் நிலைகளை மேற்கொள்ள முடிந்தது. பொருட்களை களஞ்சியப் படுத்துவதற்கான மாற்று இடமொன்றினை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் தமது பெறுமதியான சொத்துக்களை அவ்விடத்திற்கு கொண்டு செல்ல முடியும். இதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்க முடியும்.

# 3. ஆரம்பித்தல் - உங்களது BBCR கருவியை நிறுவி அதனை பயன்படுத்துதல்


## 3.1 உங்களது Android அல்லது Apple (iOS) தொலைபேசியில் BBCR கருவி APP இனை நிறுவுதல்

- கீழுள்ள QR குறியீட்டினை பயன்படுத்தி கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து இந்த APP பினை பதிவிறக்கம் செய்ய முடியும்:

- அதேபோல் அபிள் அல்லது ஐபோன் பயன்பாட்டாளர்கள் கீழ் உள்ள QR குறியீட்டினை பயன்படுத்தி APP ஸ்டோரில் இருந்து இந்த APP னை பதிவிறக்கம் செய்ய முடியும்:

## 3.2 உங்களைப் பற்றிய தகவல்களை நிரப்புக


- இந்த APP பிணை வெற்றிகரமாக தரவிரக்கம் செய்ததன் பின்னர் கீழுள்ள திரையை காட்டியவாறு அது திறக்கும்:



- முதலாவதாக” செட்டிங் குறியீட்டினை அழுத்தவும்”  வலது பக்க மேல் மூலையில் இற்றைப்படுத்தல் தகவல்கள் தொடர்பான திரை காணப்படுகின்றது. இதில் சொந்த பெயர், இறுதிப் பெயர், வியாபாரத்தின் பெயர் போன்றவற்றை பதிவதுடன் உங்களது சென்சர் இடத்தினை நிறுவ முடியும். உதாரணமாக செட் பொத்தானை அழுத்துவதன் மூலம் மழைவீழ்ச்சி தொடர்பான தகவல்களை நீங்கள் பதிவு செய்ய விரும்புகின்ற இடம் உங்களது வியாபார நிறுவனம் அமைந்துள்ள இடம் மழை வீழ்ச்சி மட்டத்தை பதிவு செய்யமுடியம்.




- “இற்றைப்படுத்துதல் தரவு குறியீட்டினை அழுத்தியது பின்னர் கீழ் காட்டியவாறு முதலாவது பக்கத்தில் உங்களைப் பற்றிய தகவல்கள் இற்றைப்படுத்தப்படும்:.





- வரைப்படத்தினை உங்களது தற்போதைய இடத்துடன் சீர் செய்யும் முகமாக “லொக்கேசன் ஐகன்” (இடகுறியீடு) அழுத்த முடியும்


## 3.3 தற்போதைய மழை நிலைமை அல்லது மழைவீழ்ச்சி மட்டங்களை இற்றைப்படுத்துதல்




- தற்போதைய மழை பற்றிய விபரம் அல்லது மழைவீழ்ச்சி மட்டங்களை இற்றைப்படுத்தும் முகமாக மழைவீழ்ச்சி தொடர்பான குறியினை அழுத்தவும். இதன் மூலம் சம்பந்தப்பட்ட திரைக்கு செல்ல முடிவதுடன் உங்களிடம் உள்ள மழைமானியில் காட்டப்பட்டதன் பிரகாரம் மணித்தியாலத்திற்கான மில்லிமீட்டர் அளவினை புதிய சென்சர் வாசிப்பில் காட்ட முடியும்.
- பின்வரும் வகைகளின் அடிப்படையில் தற்போதைய மழைவீழ்ச்சி மட்டம் இற்றைப்படுத்தப்படும். குறைவு தாழ்வானது, மத்தியதரம், உயர்வானது அதாவது உங்கள் பிரதேசத்தை சூழ உள்ள மழைவீழ்ச்சி காட்டப்படும்.



## 3.4 வழிப்படுத்தப்பட்ட இடர் மதிப்பீடு வினாக்கொத்தை அணுகி தகவல்களை பதிதல்





- இப்பொழுது இந்தக் கருவியினை முழுமையாக உங்களால் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது: உங்களது குறிப்பிட்ட இடத்திற்கு பொருத்தமான முன்கூட்டிய விதப்புரைகள் இந்த App இல் நீங்கள் பதிகின்ற சகல தகவல்களும் இரகசியமாக பேணப்படும்.


.

- வழிப்படுத்தப்பட்ட இடர் மதிப்பீட்டினை அணுகி பெற்றுக்கொள்வதற்காக மேல் உள்ள கருப்பு கோட்டினை அழுத்தவும். இதன் மூலம் வரைபடம் மறைவதுடன் விதப்புரைகளை அவதானித்து அடுத்த படிமுறைக்கு உங்களால் செல்ல முடியும்.

- அடுத்த விதப்புரைகளை தொடர்ந்து chat bot (தானியங்கி வினாக்கொத்து) ஆரம்பிக்கும். மாறுபட்ட விடயங்கள் தொடர்பான கேள்விகளையும் மாறுபட்ட கட்டமைப்புகள், ஊழியர்கள், விநியோகித்தர்கள், காப்புறுதி போன்ற தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்..



- வினாக்கொத்தினை நீங்கள் பூரணப்படுத்தியதன் பின்னர் நீங்கள் வழங்கிய பதில்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வியாபாரத்திற்கு ஏற்படக்கூடிய பிரதான இடர்கள்(Potential risk to your business) என்ற இடத்தில் காட்சிப்படுத்தப்படும். ‘உபகரணம், களஞ்சியம், ஊழியர்கள’ ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படக்கூடிய இடர்கள் வகைப்படுத்தப்படும்.




- “பிரதான விதப்புரைகளின்” கீழ் உள்ள வகைகளை அழுத்துவதன் மூலம் ஆலோசிக்கப்பட்ட செயல்கள், வளங்கள், வழிகாட்டிகள் பயன்தரக்கூடிய தொடர்புகள் ஆகியவற்றினை பயன்படுத்துனர் பெற்றுக்கொள்ள முடியும்.

.

- பயன்படுத்தினர்களினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பல மாதிரி வகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.



# பிற்சேர்க்கை - APP இல் உள்ளடக்கப்படவுள்ள மேலதிக அம்சங்கள்

- BBCR App இன் முன்மாதிரி முன்னோடி திட்டத்தின் பொழுது சில முக்கிய அம்சங்கள் கூட்டிணைக்கப்படவில்லை. இத்தகைய அம்சங்களை கூட்டிணைப்பதற்கு முன்னர், இதனை பயன்படுத்துபவர்களிடம் இருந்து பின்னூட்டல்களை பெற்றுக் கொள்வது முக்கியமாகும். இத்தகைய பின்னூட்டல்கள் மிக முக்கியமானவையாக காணப்படுவதன் காரணமாக முன்னோடி செயன்முறையின் பொழுது இவை சேகரிக்கப்படும்; முன்னோடி திட்ட குழுவினால் BBCR App தொடர்பான அறிமுகங்களை பயன்படுத்துனர்கள் பெற்றுக் கொண்டதன் பின்னர் இது இடம்பெறும்.

- BBCR முன்மாதிரி App பற்றி பயன்படுத்துனர்கள் உரிய பரிட்சயத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் கருத்திட்டக் குழுவானது மாதிரி App ஒன்றினை அறிமுகம் செய்து அதனோடு தொடர்புடைய பிற்சேர்கைகளையும் வழங்கும். விதப்புரைகள் தொடர்பான முக்கிய அம்சங்கள் மற்றும் வளங்கல் ஆகியன பற்றிய மேலதிக தகவல்களை பயன்படுத்துனர்களுக்கு வழங்குவதற்காக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. பயன்படுத்துனர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றிக்கு அவசியமான இணைப்பு (link) வழங்கப்படும்.


- இந்த மாதிரி App ஆனது பயன்படுத்துனர்களுக்கு கட்புலம் சார்ந்த கருத்தினை அல்லது தோற்றம் ஒன்றை வழங்குவதுடன் இந்த அம்சங்கள் (விதப்புரைகள் மற்றும் வளங்கள்) BBCR App இல் எவ்வாறு தோன்றுகின்றன என்பதையும் புலப்படுத்தும் அத்தோடு அவர்களுடன் எவ்வாறு ஊடாட்டத்தில் ஈடுபடுகின்றன என்பதையும் குறிக்கும்.


- BBCR App இனை எவ்வாறு விருத்தி செய்து இறுதிப்படுத்துவது என்பது தொடர்பான அர்த்தமுள்ள பின்னூட்டல்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை பயன்படுத்துனர்களுக்கு இது வழங்கும்.

- மேலதிக அம்சங்கள் தொடர்பான சுருக்கமான விளக்கம் பிரதான பயன்பாட்டாளர் கையேட்டின் பிற்சேர்க்கையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பின்வரும் இணைப்பை (link ) தொடர்பு கொள்வதன் மூலம் பயன்படுத்துனர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்: https://rebrand.ly/bbcr-invision




- வளங்கள்: இணைப்பு பற்றிய பல்வேறு விதமான பட்டியல்களை அறிந்து கொள்ளும் முகமாக பயன்படுத்துனர் விதந்துரைக்கப்பட்ட அடையாளத்தில் சொடுக்குவதன் மூலம் பல்வேறு விதமான வளங்கள் காட்சிப்படுத்தப்படும். இவை தனியான “விண்டோவில்”(window) திறக்கப்படும்.





- விருப்பமான அபிமானத்திற்குரிய விதப்புரைகளை தெரிவு செய்தல்: விதப்புரையின் வலது பக்கத்தினை அழுத்துவதன் மூலம் பயன்படுத்துனர்கள் தமது அபிமானத்திற்குரிய விதப்புரைகளை பதிவில் வைத்திருக்க முடியும். இவ்வாறு சேமிக்கப்பட்ட விதப்புரைகளுக்கு மத்தியில்




இக் குறியீடு காணப்படும்.



- விதப்புரைகளை பூரணப்படுத்துதல்:விதப்புரை தொடர்பில் பயன்படுத்துனர் நடைமுறைப்படுத்தியதன் பின்னர் விதப்புரையின் இடது பக்கத்தில் அழுத்துவதன் மூலம் அதிலிருந்து வெளியேற முடியும். தமது அபிமானத்திற்குரிய விதப்புரையாக தெரிவு செய்யும் பட்சத்தில் மீண்டும் அதனை அணுக முடியும். இவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட விதப்புரை ஆனது சரி ✔ குறி காட்டினால் காட்டப்படும்..”



- அவசரகால தொலைபேசி இலக்கங்கள்: திரையின் மேல் பக்க மூலையில் காணப்படுகின்ற குறியீட்டினை அழுத்துவதன் மூலம் அவசர நிலைமையின் பொழுது அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கங்களை தனியான "விண்டோவில" (window) காட்சிப்படுத்த முடியும்.



## வியாபாரத்தை கட்டி எழுப்புகின்ற சூழலை தாக்குகின்ற கருவிகள்', கருத்திட்டம் பற்றிய விபரம்

இலங்கையிலுள்ள சிறு வியாபார அமைப்புகளுக்கு வெள்ளப்பெருக்கினால் ஏற்படுகின்ற இழப்புகளை குறைக்கும் முகமாகவும் அதேவேளை அத்தகைய நிகழ்வுகளின் பொழுது எவ்வித தங்கு தடையும் இன்றி வியாபாரத்தை தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாகவும் நோடிக் கிலைமட் பசிலிடி Nordic Climate Facility (NCF), ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்- டென்மார்க் தொழில்நுட்ப பல்கலைக்கழக (UNEP- DTU) பங்காண்மை, ஆசிய அனர்த்த தயார்நிலை நிலையம் (ADPC), இலங்கை வர்த்தக சம்மேளனம் (CCC), MPEnsystems' ஆகியவற்றுடன் இணைந்து அனர்த்த இடர் முகாமைத்துவம் மற்றும் வியாபாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் ஆகியவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. கைத்தொழில் துறை அமைச்சு மற்றும் விநியோக சங்கிலி முகாமைத்துவ அமைப்பு ஆகியவற்றுடன் நெருக்கமாக ஒன்றிணைந்து இந்த கருத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பிரதான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நிதி ரீதியான நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவானது கருத்திட்ட ஆற்றுப்படுத்தல் குழுவை வழி நடத்திச் செல்கின்றது. உற்பத்திகளின் பொருத்தப்பாடு மற்றும் சம்பந்தப்பட்ட உதவி சேவைகளை வழங்குகின்ற அமைப்புகள், அவற்றின் பொருத்தப்பாட்டு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக இது மேற்கொள்ளப்படுகின்றது.

**Supported by:**

Nordic Climate Facility
Initiative by NDF

நோர்டிக் கிலைமட் பெசிலிடி (NCF) ஆனது ஒரு சவால் மிக்க நிதியமாகும். இது ஆக்கபூர்வமான புத்தாக்க ரீதியான காலநிலை மாற்ற கருத்திட்டங்களுக்கு நிதியை வழங்குகின்றது. போட்டி தன்மைமிக்க அடிப்படையில் (NCF) நிதியமானது ஒதுக்கீடுகளை வழங்குகின்றது. வருடாந்த அடிப்படையில் கருத்திட்ட பிரேரணைகள் கோரப்படுகின்றன. வடமேற்கு நாடுகளினால் தாபிக்கப்பட்ட சர்வதேச அபிவிருத்தி மற்றும் காலநிலை சார்ந்த நிதியிடல் நிறுவனமான நோடிக் அபிவிருத்தி நிதியத்தினால் NCF இற்கு நிதி வழங்கப்படுகிறது.

**Implemented by:**

UNEP DTU PARTNERSHIP

adpc

The Ceylon Chamber of Commerce

MP ENSYSTEMS